அமைச்சர், தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத் தலைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சென்னை(கி) மாவட்டப் பாரத சாரண சாரணியர் இயக்கம் மற்றும் ஆலடி அருணா அறக்கட்டளை சார்பாக ஒருங்கிணைக்கப்பட்ட"புகை மாசு விழிப்புணர்வுப் பேரணி" நிகழ்வைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, கழகச் சுற்றுச்சூழல் அணி மாநில தலைவர் திருமதி.பூங்கோதை ஆலடி அருணா, மாவட்டக் கழகச் செயலாளர் இளைய அருணா, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மார்ஸ் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்டம் திருவேங்கடம் பேரூராட்சிக்கு உட்பட்ட திருவேங்கடம் கூட்டுறவு சிறப்பு அங்காடியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை 1கிலோ பச்சரிசி, 1கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூபாய் 1000–ம் ஆகியவற்றை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., தனுஷ், எம். குமார் எம்.பி., மாவட்டக் கண்காணிப்பு அலுவலர் சுன் சோங்கம் ஐடக் சிரு ஆகியோர் முன்னிலையில் வழங்கி துவக்கி வைத்தனர். நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி, மாவட்ட வழங்கல் அலுவலர் அனிதா, தென்காசி மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் நரசிம்மன், முதுநிலை மண்டல மேலாளர் ராஜேஷ், வட்டாட்சியர் பாஸ்கரன் உட்பட பலர் உள்ளனர்.

தமிழர் திருநாளாம் தைத் திருநாளை முன்னிட்டு

திருவண்ணாமலையில் பொங்கல் பரிசுத் தொகுப்பு!

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி வழங்கினார்! எ.வ.வே.கம்பன் பங்கேற்பு!

திருவண்ணாமலை, ஜன.11-

பொங்கல் பரிசு தொகுப்பைத் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி வழங்கி தொடங்கி வைத்தார்.

தமிழர் திருநாளாம் தை திருநாளை முன்னிட்டு, பொதுமக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, திருவண்ணாமலை நகராட்சி, காந்தி நகர் பைபாஸ் சாலையில், துராபலித் தெருவில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, பொங்கல் பரிசு தொகுப்பை வழங்கி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், மாநில தடகள சங்க துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் மொத்தம் 182 கூட்டுறவு நிறுவனம் நடத்தும் ஆயிரத்து 616 கூட்டுறவு நியாய விலை கடைகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் 03 நியாய விலை கடைகளும், மகளிரால் நடத்தப்படும் 08 நியாய விலை கடைகள் என மொத்தம் ஆயிரத்து 627 நியாய விலை கடைகள் உள்ளது.

2024 பொங்கல் பரிசுத் தொகுப்பு பெற தகுதி வாய்ந்த அரிசி குடும்ப அட்டைதாரர்களாக கூட்டுறவு துறையின் கீழ் உள்ள கடைகளில் 7 இலட்சத்து 73 ஆயிரத்து 60 குடும்ப அட்டைதாரர்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் கடைகளில் 3 ஆயிரத்து 340 குடும்ப அட்டைகளும், மகளிரால் நடத்தப்படும் கடைகளில் 4 ஆயிரத்து 707 குடும்ப அட்டைதாரர்களும் மற்றும் ஆயிரத்து 112 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் 7 இலட்சத்து 82 ஆயிரத்து 747 குடும்பங்களுக்கு ரூ. 78 கோடியே 22 இலட்சத்து 19 ஆயிரத்தில் மட்டும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள ரூ. ஆயிரம் ரொக்கத்துடன் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக்கரும்பு மற்றும் இலவச வேட்டிச் சேலைகள் வழங்கித் துவக்கி வைத்தார்கள்.

குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் டோக்கன்கள் தெரு வாரியாக வீடு தோறும் சென்று நியாய விலைக் கடை பணியாளர்கள் மூலம் நாள் மற்றும் நேரம் குறிப்பிட்டு வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து இன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குதல் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, இணைப் பதிவாளர் கோ.நடராஜன், துணைபதிவாளர் பொது விநியோக திட்டம் ப.ராஜசேகரன், துணைப்பதிவாளர் (பொறுப்பு) திருமதி. சித்ரா, வருவாய் கோட்டாட்சியர் திருமதி. மந்தாகினி, திருவண்ணாமலை ஒன்றியக் குழு துணைத்தலைவர் ரமணன், நகர மன்றத் துணை தலைவர் ராஜாங்கம், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் – கீழ்ப்பாக்கம் மனநலக் காப்பகத்தில்

'நட்புடன் உங்களோடு' தொலைபேசி வழி மன நலச்சேவை! - இரண்டாம் பிரிவு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.11-

கீழ்பாக்கம் அரசு மனநலக் காப்பகத்தில் "நட்புடன் உங்களோடு தொலைபேசி வழி மனநல சேவை" திட்டத்தின் இரண்டாவது பிரிவை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (09.01.2024) சென்னை, கீழ்பாக்கம், அரசு மனநல காப்பகத்தில், "நட்புடன் உங்களோடு தொலைபேசி வழி மனநல சேவை" திட்டத்தின் இரண்டாவது பிரிவினை தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-

நட்புடன் உங்களோடு தொலைபேசி வழி மனநல சேவை திட்டம் ஏற்கனவே முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 27.10.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. 24 மணி நேரமும் செயல்படும் இந்த மனநல சேவை திட்டத்தில், மனநல மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள் மற்றும் ஆற்றுப்படுத்துனர்கள் ஆகியோர் அடங்கி குழுக்களின் மூலம் மனநல சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த மனநல சேவைகள் மற்றும் ஆலோசணைகள் வழங்கப்படுவதன் மூலம் பொதுமக்களிடம் பெரிய அளவில் வரவேற்பு கிடைத்துள்ளது. திட்டம் தொடங்கிய 27.10.2022 முதல் இது வரை 40,000க்கும் மேற்பட்ட அழைப்புகள் மனநல ஆலோசனைகளுக்காக பெறப்பட்டுள்ளது. இதில் 70% அழைப்புகள் 18 வயது முதல் 40 வயதிற்கு உட்பட்டவர்களுடைய அழைப்புகளாகும். மன உளைச்சல், அதீத மனக்கவலை, உறவு சார்ந்த சிக்கல்கள் மற்றும் இதர உளவியல் பிரச்சினைகள் சார்ந்த அழைப்புகளே அதிகம் பெறப்பட்டுள்ளன.

கடந்த 10.10.2023 அன்று டெல்லியில் நடந்த உலக மனநல நாள் விழாவில் "நட்புடன் உங்களோடு "(TeleMANAS14416) சேவை மூலம் ஓராண்டில் அதிக எண்ணிக்கையிலான அழைப்புகளை கையாண்டமைக்கான ஒன்றிய அரசின் விருதை தமிழ்நாடு பெற்றுள்ளது. "நட்புடன் உங்களோடு தொலைபேசி வழி மனநல சேவை" திட்டத்தின் இரண்டாவது பிரிவானது, அரசு மனநல மருத்துவமனை வளாகம், கீழ்ப்பாக்கத்தில் இன்று (09.01.2024) தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. 25 மனநல மருத்துவர்களும், ஆண்டுக்கு 18 முதுகலை மாணவர்கள் என 54 முதுகலை மனநல மருத்துவ மாணவர்களும், 3 மருத்துவ உளவியலாளர்கள் மற்றும் 10 முதுகலை உளவியல் மாணவர்களை கொண்டு இயங்கி வரும் இந்த உயர் சிறப்பு மனநல மருத்துவனையின் வளாகத்தில் இன்று "நட்புடன் உங்களோடு" இரண்டாவது பிரிவு தொடங்கி வைக்கப்பட்டது.

2022-23 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், கீழ்ப்பாக்கம் அரசு மனநல மருத்துவமனையானது, தமிழ்நாடு மனநல மற்றும் நரம்பியல் நிறுவனம் (Tamilnadu Institute of Mental Health and Neuroscience TNIMHANS) என்ற மாநில அளவிலான ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்தப்பட உள்ளது. இந்த ஒப்புயர்வு மைய வளாகத்தில் "நட்புடன் உங்களோடு" பிரிவு 2ம் இயங்க உள்ளதால் மனநலம் சார்ந்த ஆய்வுகளுக்கான களநிலவரங்களை புரிந்து கொள்ள பெரிதும் உறுதுணையாக இருக்கும். இதற்கு முன்பே, 104 என்ற அவசர உதவி எண் மூலம் நீட் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு கடந்த 3 ஆண்டுகளாக மனநல ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் உள்ள 36 மருத்துவ கல்லூரி மாணவ மாணவியர்களுக்கும் மனநல ஆலோசணைகள் வழங்கும் விதமாக "மனம்" என்னும் மனநல நல்லாதரவு மன்றங்கள் தொடங்கப்பட்டு, பொறியியல் மற்றும் கலைக்கல்லூரி மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இந்த செயல்பாடுகளின் மூலம் மாணவர்கள் மற்றும் இளம் சமுதாயத்தினர்கள் மத்தியில் தற்கொலை மேற்கொள்ளும் எண்ணம் தடுக்கப்பட்டு வருகிறது.

ஜல்லிக்கட்டு போட்டி

ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறும் இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. மாடுபிடி வீரர்களின் காயங்களுக்கு கட்டு போடுவது, தேவையான மருந்துகளை வழங்குவது போன்ற பணிகள் சிறப்பு மருத்துவர்களை கொண்டு செய்யப்படுகிறது. மேலும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறும் மாவட்டங்களில் உள்ள மருத்துவ அலுவலர்களோடு தமிழ்நாடு அரசின் மருத்துவத் துறை தொடர்ந்து தொடர்பில் இருந்துக் கொண்டிருக்கிறது, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வில்லிவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வெற்றியழகன், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி. செல்வவிநாயகம் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. தேரணிராஜன், அரசு மனநல காப்பகத்தின் இயக்குநர் மரு. மலையப்பன், மருத்துவ பேராசிரியர்கள் மற்றும் செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டத்தில்

4.25 லட்சம் பேர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகை!

மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்! திருமதி ஆ.தமிழரசி எம்.எல்.ஏ.- துரைஆனந்த் பங்கேற்பு!

சிவகங்கை, ஜன.11-

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகையாக ஒரு கிலோ பச்சரிசி முழு கரும்பு, சர்க்கரை ரூபாய் 1000ரொக்கப் பணம் வழங்க உத்தரவிட்டார். அதற்கான பொங்கல்பரிசு தொகை நேற்று பத்தாம் தேதி முதல் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. இதில் சிவகங்கை மாவட்டத்தில் 4லட்சத்து 16 ஆயிரத்து 569 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகை வழங்கப்பட உள்ளது. நேற்று முதல் நாள் பத்தாம் தேதி பொங்கல் பரிசுத் தொகை வழங்கும் நிகழ்ச்சி காஞ்சிரங்கால் நியாய விலை கடையில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் பயனளிகளுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் காட்சியகங்கள் ஊராட்சி மன்ற தலைவர் கே.எஸ்.எம். மணிமுத்து, சிவகங்கை ஒன்றியக் குழுத் தலைவர் மஞ்சுளா பாலச்சந்தர், சிவகங்கை நகர்மன்ற தலைவர்சி.எம். துரை ஆனந்த், மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் திருமதி ஜுனு,உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

மானாமதுரை

மானாமதுரை நகர்நியாயவிலைக்கடையில் திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. பொங்கல் பரிசுப் பொருட்களை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவு துணப்பதி வாளர் பாலச்சந்திரன், மேற்கு ஒன்றிய செயலாளர் எம். அண்ணாதுரை, ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, மானாமதுரை நகர் தலைவர் மாரியப்பன் கென்னடி கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன், நிர்வாகிகள் ரவிச்சந்திரன் மயில்வாகனன் நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

சிவகங்கை

சிவகங்கை நகர் 27வது வார்டு நியாயவிலை கடையில் மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் திருமதி ஜுனு தலைமையில் பயனாளிகளுக்கு நகர் மன்றத் தலைவர் சி.எம்.துரைஆனந்த் பொங்கல் பரிசினை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் செயலாளர் பெரியசாமி, நாகசுந்தரம்நிர்வாகிகள் திருமதி ஆனந்தி, சேகர், ராஜா சல்புதீன், சேது, கார்த்தி, மகேந்திரன், சேஷாத்ரி, தகவல் தொழில்நுட்ப அணி சுரேஷ், ராம்தாஸ், நகர் மன்ற உறுப்பினர்கள் மதியழகன், ஜெயகாந்தன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் மாவட்டம் முழுவதும் 829 நியாய விலை கடைகளில் இந்த பொங்கல் பரிசுத் தொகை இன்று முதல் 14 ஆம் தேதி வரை வழங்கப்படுகிறது . இதற்கான டோக்கன்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. அந்த டோக்கனில் தேதி, நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட நேரத்தில் சென்று பொங்கல் பரிசினை பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்கள். இந்த பொங்கல் பரிசு தொகை 638 முழு நேர கடைகளிலும் 177 பகுதி நேர கடைகளிலும் வழங்கப்படுகிறது.

திருவண்ணாமலை துராபலித் தெருவில் செயல்பட்டு வரும் கற்பகம் கூட்டுறவு சிறப்பு அங்காடி நியாவிலை கடை எண் : 25ல் பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பொங்கல் பரிசுத் தொகுப்பினை நேற்று (10.01.2024) குடும்ப அட்டைதார்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், மாநிலத் தடகள சங்கத் துணைத் தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.